(இ) ஆமெனில், எத்தனை விமானங்கள் இறக்குமதி செய்யக் கருதப் பட்டுள்ளது ?

(உ) அவற்றின் மொத்த மதிப்பு எவ்வளவு ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(இ) & (உ) இவ்வினா எழவில்லை.

Request from the Chairman, Tourism Development Corporation

* 303 Q.—THIRU ERA SAMBASIVAM : Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) whether any request has been received from the Chairman, Tourism Development Corporation to nationalise all taxis plying in the City of Madras; and

(b) the action proposed to be taken thereon?

சுற்றுலா அபிவிருத்திக் கழகத் தலைவரிடமிருந்து வேண்டுகோள்

திரு. இரா. சாம்பசிவம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சுற்றுலா அபிவிருத்திக் கழகத் தலைவரிடமிருந்து சென்னை நகரில் டாக்சிகள் தேசியமயமாக்கப்பட வேண்டுமென்று வேண்டுகோள் ஏதும் அரசுக்கு வந்துள்ளதா ?

(இ) அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(இ) வினா எழாது.

Resolutions passed by the Tamil Nadu Retired Teachers Association

* 304 Q.—THIRU L. BALARAMAN (on behalf of THIRU G. SWAMINATHAN) : Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) whether the resolutions passed by the Tamil Nadu Retired Teachers Association at their Conference held at Kanchipuram on 31st March 1973 have been brought to the notice of the Government;

(b) if so, the details of the resolutions; and

(c) the action proposed to be taken thereon?

[1974 ஏப்ரல் 11

தமிழ் நாடு ஓய்வு பெற்ற ஆசிரியர் சங்க மாநாட்டின் தீர்மானங்கள்

திரு. எல். பலராமன் (திரு. ஜி. சுவாமிநாதன் சார்பில்) : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன் :

(அ) தமிழ் நாடு ஓய்வு பெற்ற ஆசிரியர் சங்கத்தினர் 31-3-1973 அன்று காஞ்சிபுரத்தில் நடத்திய மாநாட்டின் தீர்மானங்கள் அரசின் கவனத்திற்கு வந்துள்ளனவா ?

(இ) ஆமெனில், அத்தீர்மானங்கள் என்ன ?

(உ) அவை மீது என்ன நடவடிக்கை எடுக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) & (உ) ஒரு விவர அறிக்கை@ அவையில் வைக்கப்பட்டுள்ளது.

B.T. Teachers

* 305 Q.—THIRU K. S. GANAPATHI (on behalf of THIRU V. ISVARMURTI) : Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) whether the Government have ordered in Memorandum No. 9698/L1/73, Education, dated 20th October 1973 that the B.T. Teachers working in Secondary Grade positions in Government 'B' Wing and Private High Schools should be given first preference in the appointment of 1,200 B.T. teachers in 'Half-a-million Scheme'; and

(b) if so, the number of teachers so far selected and appointed?

பி.டி. ஆசிரியர்கள்.

திரு. கே. எஸ். கணபதி (திரு. வ. ஈஸ்வரமூர்த்தி சார்பில்) : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன் :

(அ) அரசு -பிரிவு உயர்நிலைப் பள்ளிகளிலும், தனியார் உயர்நிலைப் பள்ளிகளிலும் இடைநிலைத்தர ஆசிரியர்களாகப் பணியாற்றும் பி.டி. ஆசிரியர் களுக்கு, "ஐந்து லட்சம் பேருக்கு வேலை வாய்ப்புத் திட்டத்தில்" 1,200 பி.டி.

@ 115–116 ஆம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.